1 EXPRESS VELACHERY Feb 13 to 19, 2022

Mother Land
Play School, Day Care & After School Care
No.38, 2nd Street, Tansi Nagar, Vijayanagar, (Near ICICI Bank - Royal Shoppee) Velachery, Chennai - 600 042.
Contact
72992 62185
90947 52300

EXPRESS EV VELACHERY
Neighbourhood Newspaper - Weekly
*Free Circulation*

TMS YOGA AND ART'S CENTER
SIMPLE SOLUTION TO LEARN
ONLINE & OFFLINE
Contact
9789098094
8012041624
9500090445
Velachery, Madippakkam, Keelkatalai.

VOL - 3 ISSUE - 45 Editorial : 044-42077328 / 7305837388 email : expressvelachery@gmail.com

# வேளச்சேரி - தரமணி சாலையில் பத்து கோடியில் கட்டப்படும் வடிகால் பணி...

வேளச்சேரி, தரமணி பகுதியில் வடியும் மழைநீரை, மூடுகால்வாயில் சேர்க்கும் வகையில், 10 கோடி ரூபாயில் வடிகால் மற்றும் இணைப்பு வடிகால் கட்டப்படுகிறது. வேளச்சேரி - தரமணி 100 அடி சாலை, 3.5 கி.மீ., நீளம் கொண்டது. இதில், சாலை மையப்பகுதியில், 15 அடி அகலத்தில் மூடுகால்வாய் உள்ளது. இந்த பகுதியில் வடியும் மழைநீர், பக்கவாட்டு வடிகால் வழியாக, மூடுகால்வாயில் விழும். இந்த மூடு கால்வாய், பகிங்ஹாம் கால்வாயுடன் இணைக்கப்பட்டது.



இந்த சாலையில், 3.5 கி.மீ., துாரத்தில், 1,600 மீட்டர் துாரம் வடிகால் வசதி இல்லை. பருவ மழையின் போது, வேளச்சேரி, தரமணி பகுதியில் வடியும் மழைநீர், தெருக்கள், பிரதான சாலை மற்றும் அணுகு சாலையில் தேங்கியது. மழைநீர், மூடு கால்வாயில் விழும் வகையில், 1,600 மீட்டர் துாரம் வடிகால் மற்றும் வடிகாலில் இருந்து மூடு கால்வாயை இணைக்க, எட்டு இடங்களில் இணைப்பு வடிகால் அமைக்கப்படுகிறது. இந்த பணி, பத்து கோடி ரூபாயில் நடக்கிறது.

பருவமழையால், நவம்பர் மாதம் பணி நிறுத்தப்பட்டது. தற்போது, அந்த பணிகள் மீண்டும் வேகமெடுத்துள்ளது. மூன்று மாதத்தில், அனைத்து பணிகளையும் முடிக்க, நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகள் திட்டமிட்டுள்ளனர்.

# Chennai: Engineering work to hit suburban train services for three days...



**CHENNAI:** Suburban trains will skip stops between Thiruninravur and Tiruvallur on the Chennai-Arakkonam route on February 6, 13 and 20 due to engineering work. Three trains will be cancelled on February 6 and 7 due to work at Vyasarpadi yard.

Eleven suburban trains will be operated on fast line. They will skip stops at Pattabiram, Nemilicherry, Veppampattu and Sevvapet stations.

Tiruvallur - Avadi EMU leaving Tiruvallur at noon will be cancelled on the three days.

Chennai Beach - Tiruvallur EMU leaving Chennai Beach at 9.55am will run only up to Avadi on the three days.

Moore Market Complex - Avadi EMU leaving Moore Market Complex at 12.15am is cancelled on February 6 and 7.

Chennai Beach-Arakkonam EMU leaving Chennai Beach at 1.20am is cancelled on February 6 and 7.

Arakkonam - Chennai Beach EMU leaving Arakkonam at 4am is cancelled on February 6. Arakkonam - Velachery EMU leaving Arakkonam at 4am will start from Beach on February 7.

# CLASSIFIED

INCOME TAX / GST RETURNS, ROC ANNUAL COMPLIANCE / COMPANY INCORP / PF-ESIC eTDS / TRADEMARK REGN / DSC

ASHARAJ BUSINESS CONSULTANTS
CMA.T.RAJKUMAR JAIN
**99401 11431**
Email:cmarajkumar@gmail.com

---

**Commercial Space for Rent**

*Velachery Main Road Opp to Chennai Silks*

850 sq. ft. New building Fully furnished Suitable for Scan Centre, Diagnostic Lab, PolyClinic

*Contact*
**9841002876**

---

**Butter Flies**

Beauty Parlour & Beauty Training Institute
(Recognised by Tamilnadu Government)

**Ladies & Kids Only**
Consultant: Beauty tip & women empowerment (adviser)

No:1, MG NAGAR, ATHANUR - 603 202
binduinno@gmail.com
**80560 87391**
**81247 02731**

---

**TUITION CENTRE @ Velachery**

**Baby Nagar**

*For Students Till 9th Grade of Any Syllabus*

*Contact*
**909 494 7285**

---

**SERVICES**

Plumbing, Electrical & CCTV Camara Fixing works

Contact P. Balaji
**9677409529**
**9962242015**

---

**SERVICES**

Plumbing works

Contact Govindaswamy
**87544 09752**

---

**SHARAN TRAVELS**

All kinds of Tourist vehicle available here

**Drivers Available**

Contact V. Marimuthu
**9840508030**

---

CONSULTANT CATERING HOSPITALITY SERVICE

**NFC**
NIMS FOOD CONSULTANT

E. KAMESH KUMAR IHM-MBA

Office:plot No:4,kumaran nagar, keelkattalai, chennai-600117

Adviser:K.VIJAYA KANCHANA
MSC Food & Nutrition.

email:Nutritionnfc@gmail.com
**Mobile:9790 902400**
email:Consultantnfc@gmail.com

---

**RENTAL**

LAND BUYING, SELLING

All Kind of Building Repair Works Undertaken

Contact B. Rajendran
**90809 94500**

---

**COMPUTER *SERVICES***

Laptop, Peripherals through Installation, Sales, Services, Chiplevel, Virus Removal, Networking Solutions to all Hardware & Software

*Contact*
**9841823435**
**9841823436**

---

**NISHA YOGA & MEDITATION CENTRE VELACHERY**

Online Class for Women and Kids

*FOR ALL AGE CATEGORIES*

*CONTACT*
**89391 53560**

---

**LIBRARY FOR CHILDREN**

*At 8/3 Vth Cross Street, 13th Main Road, Vijayanagar, Velachery, Chennai - 600 042.*

*Contact*
**9171950340**
**8056103724**

---

**Spoken English Class**

ஆங்கிலம் கற்க ஆசையா?

*Contact*
**9940354513**

---

**WANTED - LADIES TAILOR**

**PRASUDRA** *Boutique*

Salary Rs.15000/-

*Only Ladies*

Working time 10.00am to 5.00pm / Sunday holiday

No:2 LAKSHMI NAGAR, 2nd STREET, VELACHERY

CONTACT : PREMALATHA.G
**4435504719 / 8870393999**

---

**WOMAN'S WELLNESS YOGA CENTRE**
**Contact : 9444 122 922**

**TREATMENTS FOR**

- Headache / Migraine
  தலைவலி / ஒற்றை தலைவலி
- Sinusitis
  சைனஸ் தொந்தரவு
- Neck Pain / Cervical Spondylosis
  கழுத்து வலி
- Back Pain / Lumber Spondylosis
  முதுகு வலி
- Digestion Problems & GIT disorders
  வயிறு & குடல் சம்பந்தமான தொந்தரவுகள்
- Uterine ailment like Fibroid
  கர்ப்பப்பை கோளாறுகள்
- PCOD
  மாதவிடாய் கோளாறுகள்
- Respiratory ailments, Asthama
  சுவாச கோளாறுகள்
- Diabetes & is Complications
  சர்க்கரை வியாதிகள்
- Cholastrol, BP
  கொலஸ்ட்ரால், ரத்த கொதிப்பு
- Thyroid Problems
  தைராய்டு பிரச்சனை
- Stress, Anxiety & Sleep Disturbance
  மன அழுத்தம் & தூக்கமின்மை
- Weight Loss & Weight gain
  உடல் எடையை குறைக்க & அதிகரிக்க
- General Health
  பொது மருத்துவம்
- Infertility
  குழந்தையின்மை

---

**YOURS DETECTIVE AGENCY**
துப்பறியும் நிறுவனம்

PRASANNA KUMARI. R
*(LADY DETECTIVE)*
HEAD OF INTELIGENTS

*No:27/D, Shivas Sundaram Flats, Nattar Street, Velachery, chennai - 42.*

*Contact*
**90945 55522**

---

**YOURS FAMILY SALON**
*BRIDAL STUDIO*

Sushmitha
MAKEOVER ARTIST

*Contact*
**96770 97907**
**98405 91115**

---

**Rent/lease**

Hotel/Gudon Mess/Office House for Rent/Lease

*Contact*
**7867982030**
**9600456182**

---

**Commercial Space for Rent**

850 Square feet for 27,000/- @ ground floor

*Diya Complex, Vijayanagar Main Road, Velachery (Near Ananda Bhavan)*

2 L as advance

**CONTACT**
**7305837388**

---

**Commercial Space for Rent**

650 Square feet for 23,000/- @ first floor

*Diya Complex, Vijayanagar Main Road, Velachery (Near Ananda Bhavan)*

6 month rent as advance

**CONTACT**
**7305837388**

---

**WANTED**

*Tele Callers*

**CONTACT**
**7305837388**

---

**DESIGNING**

Tamil & English DTP designing works
Rs. 750/- only

*Contact*
**7305837388**

---

To Advertise about Your Business Rental House, Buying, Selling, Services & Job Vacancy Pay Rs. 100/- Only

# Seven-year feat: Chennai's longest flyover nears completion...




**CHENNAI:** Construction of the city's longest flyover, linking Nanmangalam with Medavakkam, is nearing completion. Installation of lights and laying of an approach road are expected to be over in a week. A senior official from the state highways department said the 2.06km-long flyover, covering the key junctions of Sholinganallur, Mambakkam and Madipakkam, will greatly reduce congestion on Tambaram-Velacherry road.

On an average, 1.25 lakh motorists use the stretch daily. "With the completion of this flyover, those heading to Velachery from Tambaram area can reach their destination without delay," he said.

Construction of the flyover began in 2015, but was halted about a year later. Agreement with the then contractor was terminated and work awarded to a new one, who resumed the construction in 2018. The Madipakkam-Tambaram road now has two flyovers. The first was built to ease traffic flow from Medavakkam to Nanmangalam, for vehicles heading to Tambaram and beyond. The second was built to connect Tambaram with Velacherry (via Medavakkam).

The construction of the first flyover faced a two-year delay. It was finally inaugurated in February last. As for the second, the delay was three years, said an official.



## நைட்டிங்கேல் என்று அழைக்கப்படும் சரோஜினி நாயுடு (Sarojini Naidu) பிறந்த தினம் இன்று - பிப்ரவரி 13, 1879

சரோஜினி நாயுடு அல்லது சரோஜினி சட்டோபத்யாயா பிப்ரவரி 13, 1879ல் பிறந்தார். இவர் ஒரு பிரபலமான சிறுமுது அறிஞர், கவிஞர், எழுத்தாளர், சுதந்திரப் போராளி மற்றும் சமூக ஆர்வலர் ஆவார். இந்திய தேசிய காங்கிரசின் இரண்டாவது பெண் தலைவரும் உத்தரப்பிரதேச மாநிலத்தின் முதல் பெண் ஆளுனரும் ஆவார். இவர் (இந்தியாவின் நைட்டிங்கேல்) என்றும் அழைக்கப்படுகிறார்.

சரோஜினி நாயுடு, இந்தியாவின் ஹைதாராபாத் மாநிலத்தில் ஒரு வங்காள குலின் பிராமணக் குடும்பத்தில் பிறந்தார். இவரது தந்தை பெயர் அகோரநாத் சட்டோபத்யாயா. இவரது தாய் பெயர் வரதா சுந்தரி. 12 வயதில் சரோஜினி நாயுடு அவரது மெட்ரிகுலேஷன் பரீட்சையில் சென்னைப் பல்கலைக்கழகத்தில் தேர்ச்சி பெற்றார். அவர் மாநில அளவில் முதலிடம் பெற்றார். பதினாறு வயதில் முதன் முதலாக நிஜாம் அறக்கட்டளையின் உதவித்தொகை லண்டனிலுள்ள கிங்ஸ் கல்லூரி மற்றும் கேம்பிரிட்ஜ் கிர்டன் கல்லூரியில் மூலம் படிப்பதற்காக சென்றார். உருது, தெலுங்கு, ஆங்கிலம், பாரசீகம், பெங்காலி ஆகிய மொழிகளைப் பேச கற்றுக்கொண்டார்.

1905 ஆம் ஆண்டில் வங்காளம் பிரிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவர் இந்திய சுதந்திர போராட்டத்தில் பங்கேற்றார். ரபீந்திரநாத் தாகூர், அன்னி பெசண்ட், மோகன்தாஸ் காந்தி, ஜவஹர்லால் நேரு ஆகியோரின் அறிமுகத்தைப் பெற்றார். இந்திய சுதந்திரப் போராட்டத்தில் மகாத்மா காந்தியுடன் இணைந்து தண்டி யாத்திரையில் ஈடுபட்டார். 1947 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 15 ஆம் நாள் இந்தியா சுதந்திரம் பெற்றதற்குப் பிறகு உத்தரப்பிரதேசத்தில் ஆளுநராக பதவியேற்றார். இதன் வழியாக இந்தியாவின் முதல் பெண் ஆளுநரானார்.

# மெட்ரோ ரயில் நிலைய கட்டுமான பணியால் போக்குவரத்து மாற்றம்...?



ராயப்பேட்டை மெட்ரோ ரயில் நிலைய கட்டுமான பணிக்காக, மருத்துவமனை - மணிக்கூண்டு இடையே மட்டும், சாலை போக்கு -வரத்தில் மாற்றம் செய்யப்பட உள்ளது. சென்னை மெட்ரோ ரயில் இரண்டாவது கட்ட திட்டத்தில், மாதவரம் - சிறுசேரி சிப்காட் இடையே, 45.8 கி.மீ., மெட்ரோ ரயில் பாதை அமைக்கப்பட உள்ளது. இப்பாதையில், முதற்கட்டமாக மாதவரம் - தரமணி இணைப்பு சாலை வர, பணிகள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளன.

சுரங்க நிலையங்கள், பாதை கட்டுமான பணிகளுக்கு ஒப்பந்ததாரர்கள் நியமிக்கப்பட்டு, கட்டுமான ஆரம்பக்கட்ட பணிகள், சுரங்க நிலையங்கள் கட்டுவதற்கு பாதுகாப்பு சுற்றுச்சுவர்கள் அமைக்கும் பணிகள் நடக்கின்றன. இத்திட்டத்தில், ராயப்பேட்டை அரசு மருத்துவமனை எதிரில் மெட்ரோ நிலையம் சுரங்கத்தில் கட்டப்பட உள்ளது.

இதற்கான இடம் கையகப்படுத்தப்பட்டு, நிலையம் கட்டும் இடத்தில், தற்காலிக இரும்பு தடுப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. நிலையம் கட்டுமான பணிக்கான ஆரம்பகட்ட பணிகள் முடிந்து, சுரங்க நிலையம் அமைக்க, பாதுகாப்பு சுற்றுச்சுவர் அமைக்கும் பணி துவக்கப்பட உள்ளது.

இதற்காக, ராயப்பேட்டை மேம்பாலத்தில் இருந்து மணிக்கூண்டு நோக்கி செல்லும் வெஸ்ட்காட் சாலையில், கட்டுமான பணிக்காக நிலம் எடுத்துக் கொள்வதற்காக, ஒரு பகுதி சாலையின் மையத்தடுப்பு வரை, தற்காலிக இரும்பு தடுப்பு அமைக்கப்பட்டுள்ளன.

மணிக்கூண்டில் இருந்து ராயப்பேட்டை மருத்துவமனை நோக்கி செல்லும் சாலை நெடுகிலும், இரண்டு பகுதியாக தற்காலிக இரும்பு தடுப்பு அமைக்கப்பட்டு உள்ளன.

இச்சாலையில் வாகனங்கள் இருவழியிலும் சென்று, வருவதற்கு ஏற்பாடு நடக்கிறது. இப்பணி முடிந்ததும், நிலையம் கட்டும் இடத்தில், வாகனப் போக்குவரத்து குறித்து, முறையான அறிவிப்பு வெளியிடப்பட உள்ளது.

# அடுத்த கொரோனா திரிபு: உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை...



ஜெனிவா: ஒமைக்ரானுக்கு அடுத்ததாக வரும் கொரோனா திரிபுகள் தீவிரமாக தொற்றும் தன்மை கொண்டதாக இருக்கும் என உலக சுகாதார அமைப்பு எச்சரித்துள்ளது.

உலக சுகாதார அமைப்பின் கொரோனா தொழில்நுட்ப ஆய்வுப் பிரிவின் தலைவர் மரியா வான் கெர்கோவ் கூறியதாவது: இன்னும் சில காலத்திற்கு கொரோனா தடுப்பு வழிகாட்டு நெறிமுறைகளை உலக மக்கள் தொடர வேண்டியிருக்கும்.

கொரோனா திரிபுகளில் ஒமைக்ரான் கடைசியாக இருக்காது. மேலும் சில திரிபுகள் மக்களைத் தாக்க வாய்ப்புள்ளது. கொரோனாவின் அடுத்த திரிபு, ஒமைக்ரானைவிட தீவிரமாக தொற்றும் தன்மை கொண்டதாக இருக்கும். அதற்குப் பிறகும் சில திரிபுகள் ஏற்படக்கூடும்.

அடுத்தடுத்த திரிபுகளுக்கு எதிராக தடுப்பூசிகளின் எதிர்ப்புத் திறன் குறையக்கூடும். எனினும், நோய்த் தொற்று ஆபத்தையும் உயிரிழப்பையும் தடுப்பூசி பெருமளவு தடுக்கும். இவ்வாறு அவர் கூறினார்.


## சென்னையில் தங்கம் மற்றும் வெள்ளி விலை நிலவரம்

| | 22 கேரட் | 24 கேரட் |
|---|---|---|
| தங்கம் விலை - | 1 கிராம் ₹ 4,653 | 1 கிராம் ₹ 5,706 |
| | 8 கிராம் ₹ 37,224 | 8 கிராம் ₹ 40,608 |
| வெள்ளி விலை - | 1 கிராம் ₹ 67.40 | |
| | 1 கிலோ ₹ 67,400 | |

















# Chutties Corner

## தனித்திறமை பகுதி





Kundavi
IV - Std

## HAPPY BIRTHDAY



Nithyashree
January - 17



M. Harish Ramasamy
January -19



Dharshini
January -19




Kenneth Kingston
February - 02

## திருக்குறள்


31. அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தான் இடை.

Needs not in words to dwell on virtue's fruits: compare
The man in litter borne with them that toilling bear

## PAPER CRAFT




## படத்தில் உள்ள 5 வித்தியசங்களை கண்டுபிடியுங்கள்...!



Find 6 Differences ?

## வண்ணக்கோலம்





ASHIKA NATESAN
Chrompet

## The Story Of Shama

Mrs and Mr Murthy were beaming,
While the people around them were gleaming,
As little Shama came into this world, dreaming.

Shama was a bundle of joy,
Trying to spread happiness as an envoy,
He surely was a jolly boy.

He loved adventure,
And the scenic nature,
Also, every little creature.

Shama had a friend,
With whom he would blend,
And most of his time he would spend.

Years passed by,
Now Shama was a handsome guy,
His proposal no one could deny.

Shantha his wife was demure,
Always engrossed in the household chore,
And her responsibilities never did she ignore.

Years rolled by and his son was a big guy,
Flying aircrafts high in the sky,
Though he was a little shy.

Thirucheri's station master, the one and only Shama,
Spent his evenings in his pajama,
With his wife in his corridor, singing songs on Rama.

Shama was a happy man,
Now, enjoying his blissful rustic life,
With his innocent loving wife.



*Dr. Mrs. Y. Deepika, M.Sc, Ph.D,*
*Delhi Public School,*
*Nacharam,*
*Hyderabad.*

TMS YOGA AND ART'S CENTER
SIMPLE SOLUTION TO LEARN



YOGA
✶ SPOKEN ENGLISH ✶ DRAWING
✶ ABACUS ✶ VOCAL ✶ CHESS
✶ PHONIX ✶ ZUMBA
✶ BHARATHANATYAM
✶ DEVOTIONAL STORY
✶ WESTERN DANCE
ONLINE & OFFLINE
9789098094, 8012041624, 9500090445
Velachery, Madippakkam, Keelkatalai.

## Word - O - Mania

- **Conservative** (adjective) - opposed to great or sudden social change; showing that you prefer traditional styles and values; orthodox
  Rani's style of dress was never conservative.
- **Charismatic** (adjective) – having the powerful personal quality that some people have to attract and impress other people; charming
  Mrinal is a charismatic speaker.
- **Camouflage** (verb) - to hide somebody/something/yourself by making them/it/yourself look like the things around, or like something else
  The soldiers camouflaged themselves with leaves.

*By*
*Dr. Mrs. Y. Deepika, M.Sc, Ph.D,*
*Hyderabad.*


தெரிந்துக்கொள்ளுங்கள்!



### கரும்பு சாப்பிட்டவுடன் தண்ணீர் குடிக்காதீர்கள்...!

**கரும்பு சாப்பிட்டு முடித்து பதினைந்து நிமிடங்களுக்கு பிறகு தான் தண்ணீர் குடிக்க வேண்டும். ஏன் என்றால் "கரும்பில் சுண்ணாம்புச் சத்து என்ற கால்சியம் அதிகம் உள்ளது. இந்த சுண்ணாம்பும் எச்சிலும் இணைந்து வேதிவினையாற்றுகிறது. அந்த சமயத்தில் தண்ணீர் குடிக்கும் போது அதிகமான சூட்டைக் கிளப்பும் எதிர்வினை நடக்கிறது. இதனால் நாக்கு வெந்து விடுகிறது" என்கிறார்கள் மருத்துவர்கள்.**

Dr.RAJESHWARI'S
Skin and Hair Restoration Centre
Avail 50% on Hair Test
Book for Unlimited Hair with
HAIR TRANSPLANT
UPTO 40% Off + Get 2 PRP FREE
PRP HAIR-REGROWTH
Book 5 Sessions Get FREE Sessions
Book Now
73373 11188



T&C Apply
Dr.RAJESHWARI'S
Skin and Hair Restoration Centre
World Class Advanced Skin & Hair RestorationCentre
ANTI-AGING Treatment | HAIR Re-Growth | SKIN Rejuvenation | MEGA HAIR Transporation | LASER Hair Reduction
CHENNAI AND HYDERABAD
CHENNAI - BRANCH
Door No.15, First Floor, Velachery Main Road, Opposite to Phoenix Mall, Chennai - 600 042
Cell - 7337311188 / 044-42152111
Email : info.drrschrc@gmail.com
http://www.drrajeshwarisclinic.com

# பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தை மீட்டெடுக்க பசுமை தீர்ப்பாயம் உத்தரவு...

ஆக்கிரமிப்புகளையும், குப்பை கிடங்கையும் அகற்றி, பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தை பழைய நிலைக்கு மீட்டெடுக்க வேண்டும் என, தென் மண்டல பசுமை தீர்ப்பாயம் உத்தரவிட்டுள்ளது. சென்னை அடையாறு முகத்துவாரத்தில் அமைந்துள்ள பள்ளிக்கரணை சதுப்பு நிலம், குப்பை கிடங்காக மாற்றப்பட்டது. பறவைகள் சரணாலயமாகவும் உள்ள, இதன் பெரும்பகுதி ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது.

இதனால், 1965ல், 5,500 ஹெக்டேராக இருந்த இதன் பரப்பளவு, பெருமளவு சுருங்கி விட்டது. "ஆக்கிரமிப்புகளையும், குப்பை கிடங்கையும் அகற்றி பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தின் அசல் பரப்பளவை மீட்டெடுக்க வேண்டும்" என, வழக்கறிஞர் மேகநாதன் என்பவர், தென்மண்டல பசுமை தீர்ப்பாயத்தில் மனு தாக்கல் செய்தார்.

பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தின் ஆக்கிரமிப்புகள் குறித்து பத்திரிகைகளில் வந்த செய்திகளின் அடிப்படையில், பசுமை தீர்ப்பாயம் தானாக முன்வந்து இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்து கொண்டது.

"வீடியோ கான்பரன்ஸ்" வாயிலாக வழக்கை விசாரித்த, தென் மண்டல பசுமை தீர்ப்பாய நீதிபதி கே.ராமகிருஷ்ணன், நிபுணர்குழு உறுப்பினர் சத்யகோபால் ஆகியோர் பிறப்பித்த உத்தரவு: சென்னையில், பள்ளிக்கரணை பகுதியில் மட்டுமே சதுப்புநிலம் உள்ளது.

உள்நாட்டிலும், வெளிநாடுகளில் இருந்தும் வரும் ஆயிரக்கணக்கான பறவைகள், நுாற்றுக்கணக்கான தாவரங்கள், விலங்குகளின் வாழ்விடமாக இந்த சதுப்பு நிலம் உள்ளது. தனித்துவமான சூழலியல் தன்மை உடைய பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தில், பெருங்குடி குப்பை கிடங்கும், கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையமும் உள்ளன.

குப்பை கிடங்காக மாற்றப்பட்டதாலும், ஆக்கிரமிப்பு கட்டடங்களாலும் இதன் பரப்பளவு, 548 ஹெக்டேராக குறைந்துவிட்டது. இது தொடர்பான வழக்குகளை விசாரித்த சென்னை உயர்நீதிமன்றம், சதுப்பு நிலத்தை மீட்டெடுக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்குமாறு உத்தரவிட்டது.



அதன்படி, ஆக்கிரமிப்புகள், குப்பை கிடங்கை அகற்றி, பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தை பழைய நிலைக்கு மீட்டெடுக்க வேண்டும். குப்பை கிடங்கை அகற்றி, அந்த இடத்தை வனத்துறையிடம் ஒப்படைக்க வேண்டும். இப்பகுதியில் நீரின் தரத்தை கண்டறிந்து, சுத்திகரிக்கப்படாத கழிவு நீரை விடுவோர் மீது, மாசு கட்டுப்பாடு வாரியம், மாநகராட்சி ஆகியவை உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். நிலங்கள் மீட்கப்பட்டு வனத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டதும், அதை சுற்றுச்சூழல், பல்லுயிர் பூங்காவாக மேம்படுத்தி, பறவைகள் சரணாலயமாக மாற்ற வேண்டும். இதற்கு தமிழக அரசும், சம்பந்தப்பட்ட துறைகளும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அந்த உத்தரவில் கூறப்பட்டுள்ளது.

**ஆன்மீக தகவல்**

## திருமணம் தடைப்படுபவர்கள் எந்த நாளில் நரசிம்மரை விரதம் இருந்து வழிபட வேண்டும்...

நரசிம்மரை பூஜித்து வழிபடுவது மிகவும் சுலபம். அனைவருக்கும் அவர் எளிதானவர். முற்பிறவித் தவறுகளின் பலனாக ஏற்படும் மிகக் கொடிய துன்பத்தையும் ஒரு நொடியில் போக்கி அருளக்கூடிய ஆற்றல் பெற்ற நரசிம்மரைக் கிரக தோஷப் பரிகாரமாக எவரும் வழிபடலாம். அதற்கு உடனடியாக பலனும் காண முடியும்.

தினமும் ஸ்ரீலட்சுமி நரசிம்மரின் படத்தை வைத்து, நெய் தீபம் ஏற்றிக் குறைந்தது 12 முறையாவது வலம் வந்து வணங்க வேண்டும்.

48 நாள்களாவது விரதம் இருந்து பூஜித்து வர வேண்டும். மாலை நேரத்தில் செய்வது விசேஷப் பலன் தரும். ஏனெனில் அவர் நரசிங்கமாக அவதரித்தது மாலை நேரத்தில் தான்.

ஸ்ரீலட்சுமி நரசிம்மர் மட்டுமின்றி, தெய்வத்தின் எந்த உருவையும், தோஷப் பரிகாரமாகப் பூஜித்து வரும் காலத்தில், அசைவ உணவைத் தவிர்த்து, நீராடி, நியமத்துடனும், தூய்மையான உள்ளத்துடனும் நம்பிக்கை, பக்தியுடனும் இருக்க வேண்டியது மிகவும் அவசியமாகும்.

ஸ்ரீநரசிம்மரை பிரதோஷத்தன்று விரதம் இருந்து வழிபடுவது சிறப்பாகும். அன்று மாலை லட்சுமி நரசிம்மர் போட்டோவை வீட்டில் வைத்து சந்தனம், துளசியால் அலங்கரித்து பானகம் வைத்து வழிபடவும்.

ஸ்ரீலட்சுமி நரசிம்மரை சுவாதி நட்சத்திரத்தன்றும், செவ்வாய்க் கிழமையிலும், பிரதோஷ நாளன்றும் வழிபடலாம். நரசிம்மர் துதியை தினமும் சொல்லி தியானித்து வர ஏவல், பில்லி சூனியம், கடன் தொல்லை இவைகள் நீங்கி சுகம் பெறலாம்.

திருமண தடை உள்ளவர்கள் விரதம் இருந்து பிரதோஷ தினத்தன்று பானகம் வைத்து நரசிம்மரை வழிபட்டு வந்தால் நரசிம்மர் அருளால் தடை நீங்கி திருமணம் நடைபெறும்.

# இந்த வார ராசிபலன்



**மேஷம்**
இந்த வாரம் உங்களுக்கு அதிக பணம் தேவைப்படும், ஆனால் முன்பு நீங்கள் செய்த தேவையில்லாத செலவுகளால் பணம் இல்லாமல் நீங்கள் பெரும் துன்பத்தை சந்திக்க நேரிடும்.



**ரிஷபம்**
இந்த வாரம் நீங்கள் உங்கள் வேலை சம்பந்தமான தேவையற்ற பயணத்தை மேற்கொள்ள நேரிடும். எனவே, இப்போதைக்கு இந்தப் பயணத்தைத் தவிர்ப்பது நல்லது.



**மிதுனம்**
இந்த வாரம் நீங்கள் பயணம் செய்து பணத்தை செலவழிக்கும் மனநிலையில் இருப்பீர்கள். ஆனால் எந்த விதமான பணத்தையும் செலவழிக்கும் போது மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.



**கடகம்**
இந்த வாரம், தவறுதலாக கூட, உங்கள் குடும்ப உறுப்பினர்களிடம் கடுமையாக நடந்து கொள்ளாதீர்கள். உங்கள் கடுமையான கோபத்தினால் குடும்ப அமைதி குலைந்துவிடும்.



**சிம்மம்**
இந்த வாரம் பலருக்கு தொழில் மற்றும் கல்வி சார்ந்த பலன்கள் கிடைக்க வாய்ப்பு உள்ளது. உங்கள் கல்வி மற்றும் அனுபவங்களுக்கு ஏற்ற பல நல்ல வாய்ப்புகள் கிடைக்கும்.



**கன்னி**
இந்த வாரம் உங்கள் ஆரோக்கியம் மேம்படும், ஆனால் வாழ்க்கையின் பல்வேறு பகுதிகளில் நடக்கும் ஏற்ற தாழ்வுகள் உங்களை அமைதியற்றதாக உணர வைக்கும்.



**துலாம்**
இந்த வாரம் உங்கள் சமூகத்தின் பல மரியாதைக்குரிய நபர்களுடன் உங்கள் உரையாடல் நிறுவப்படும். அவர்களின் பல்வேறு அனுபவங்களிலிருந்து புதிய திட்டங்களை உருவாக்குவீர்கள்.



**விருச்சிகம்**
இந்த வாரம் உங்களின் ஒவ்வொரு விதமான சூழ்நிலையையும் புரிந்துக் கொண்டு அதற்கேற்ப நீங்கள் அமைதியாக இருப்பது நல்லது என்பதை நினைவில் கொள்ளுங்கள்.



**தனுசு**
இந்த வாரம், பணியிடத்தில் வேலை பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு, முதலில் இருந்தே உங்கள் புத்திசாலித்தனத்தையும் செல்வாக்கையும் பயன்படுத்த வேண்டியிருக்கும்.



**மகரம்**
இந்த வாரம் நீங்கள் உங்கள் அன்றாட வேலையில் இருந்து வித்தியாசமாக ஏதாவது செய்ய முயற்சி செய்வதன் மூலம், உங்கள் வாழ்க்கையில் பல புதுமைகளைக் கொண்டு வரலாம்.



**கும்பம்**
இந்த வாரம் வெளி நாடு தொடர்பான சில வியாபாரங்களைச் செய்வதன் மூலம் நிதிப் பலன்களைப் பெறுவதிலும் மகத்தான வெற்றியைப் பெறவும் உங்களுக்கு வாய்ப்புள்ளது.



**மீனம்**
இந்த வாரம் உங்கள் மன உறுதி மற்றும் உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும். மேலும் ஒவ்வொரு பணியையும் முன்பை விட அதிக வேகத்தில் முடிக்க முயற்சி செய்வீர்கள்.


# ISRO to launch earth observation satellite on February 14...

After a rather muted 2021, the Indian Space Research Organisation (ISRO) is all set for its first launch of 2022 next week.

ISRO plans to place, into orbit, an Earth Observation Satellite (EOS - 04) on board the PSLV C-52 on February 14. This will be the first launch for ISRO under the new chairman, S. Somanath.

According to ISRO, the PSLV C-52 is scheduled to launchat 05.59 a.m. From the first aunch pad of the Satish Dhawan Space Centre at Sriharikota.

ISRO plans to place the 1,170 kg EOS-04 in a sun synchronous polar orbit of 529 km. EOS-04 is a radar-imaging satellite, designed to provide high-quality images under all weather conditions for applications such as agriculture, forestry & plantations, soil moisture and



hydrology, and flood mapping.

The mission will also carry two small satellites as co-passengers --a student satellite, INSPIREsat-1, from the Indian Institute of Space Science & Technology (IIST) in association with the Laboratory of Atmospheric & Space Physics at the University of Colorado, Boulder and a technology demonstrator satellite, INS-2TD from ISRO.

The countdown process of 25 hours and 30 minutes will commence at 4.29 a.m on February 13, ISRO said.

# இந்தியாவில் மேலும் 1.72 லட்சம் பேர் நலம்...

இந்தியாவில் கடந்த 24 மணி நேரத்தில் 71,365 பேருக்கு கோவிட் உறுதியான நிலையில், 1.72 லட்சம் பேர் நலமடைந்தனர்.

இது தொடர்பாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில் கூறியுள்ளதாவது: இந்தி-யாவில் கடந்த 24 மணி நேரத்தில் புதிதாக 71,365 பேருக்கு கோவிட் உறுதியானது. இதனால், பாதிப்பு 4,24,10,976 ஆனது. தற்போது, தினசரி தொற்று உறுதியாகும் விகிதம் 4.54 சதவீதமாக உள்ளது.

அதேபோல், மேலும் 1,72,211 பேர் கோவிட்டில் இருந்து மீண்டனர். இதனால், வைரஸ் தொற்றில் இருந்து மீண்டவர்கள் எண்ணிக்கை 4,10,12,869 ஆனது. தற்போது, 8,92,828 பேர் சிகிச்சை



பெற்று வருகின்றனர். கோவிட் காரணமாக 1,217 பேர் உயிரிழந்ததால், இறந்தவர்-களின் எண்ணிக்கை 5,05,279 ஆனது.

இந்தியாவில் இதுவரை 1,70,87,06,705 டோஸ் தடுப்பூசி போடப்பட்டு உள்ளது.

**சென்னையில் பெட்ரோல், டீசல் விலை நிலவரம்**






| பெட்ரோல் விலை | டீசல் விலை |
|---|---|
| விலை 1 லிட்டர் | விலை 1 லிட்டர் |
| ₹ 101.40 | ₹ 91.43 |

# Entertainment Corner

## குறுக்கெழுத்துப் புதிர்




**இடமிருந்து வலம்:**

1. திருமதி ஒரு_______விசு இயக்கத்தில் வெளிவந்த ஒரு திரைப்படம் (4)
3. "ஹேண்ட்கர்சீப் - தமிழில் (5)
5. சிறுதானிய வகை ஒன்று சோ__________(2)
6. இது கொடுத்த மாட்டை பல்லை பிடித்து பார்க்கலாமா! கலைந்துள்ளது. (3)
11. உற்பத்தி அதிகமானால் விலையில்_________வு ஏற்படும். (2)
12. கள்ளன் - பெண்பால். (3)
14. முட்டாள்தனம் அதிகமாக உள்ளவனை_________கட்டின முட்டாள் என்பர். (2)
16. தொல்லை. (3)
17. பிள்ளைகளை இளம் வயதிலிருந்தே______ப்புடன் வளர்த்தால் தான் நல்ல பண்புடையராவர் (3)
18. எம்.ஜி.ஆரை அண்ணாவின இது என்பர், எம்.ஜி.ஆர், நடித்திருந்த திரைப்படமும் கூட (6)

**வலமிருந்து இடம்:**

4. உடலில் அடிபட்டதால் மறையாமல் இருக்கும் அடையாளம். (2)
7. சாதகம் எதிர்ச்சொல் (4)
10. மொபைல் போனில் பேச வேண்டும் என்றால், இந்த கார்டு போட்டிருக்க வேண்டும். (2)
13. _______ நரி சலசலப்புக்கு அஞ்சாதாம். (6)
15. ராமாயண வில்லி இவர் (2)

**மேலிருந்து கீழ்:**

1. இது வரும் முன் அணை போடணும். (4)
2. மலைக்கு எதிரானது. (2)
3. அலுவலகத்தில்_________செய்ததால் அவன் சிறையில் அடைக்கப்பட்டான். (4)
8. _________லன் கட்டி வைத்தான் கல்லணை (3)
11. இது ஒரு இருட்டறை என்று கூறியவர் அண்ணாதுரை.(4)
12. பளு (3)
16. அடுத்த 24 மணி நேரத்தில்____________மின்னலுடன் மழை பெய்யும் வானிலை அறிக்கை (2)

**கீழிருந்து மேல்:**

7. சிவபெருமானின் மனைவி (4)
9. திருப்பூர் என்றால் இது தான் (5)
10. சிறுமுயலிடம் அதன் தந்திரத்தால் ஏமாந்த விலங்கு இது காட்டுக்கும் ராஜா. (4)
13. இரண்டு மலைகள் இணையும் இடத்தின் தாழ்வான பகுதி (7)
15. காரியத்தை சாதித்துக் கொள்ள உடலை நெளித்துக் கொண்டு போடும் கும்பிடு________கும்பிடு. (2)
17. "பந்த்" அன்று இது ஏற்படக் கூடும் என எதிர்பார்த்து போலீசார் உஷாராக இருந்தனர். (5)
18. மார்கழி மாதத்தில் சபாக்களில் ________ கச்சேரிகள் நடக்கும். (2)
19. வயல் என்பதன் வேறொரு அழகான சொல் (3)

உங்களின் திறமைகளை வெளிப்படுத்த, உங்கள் ஓவியம், கைத்திறம், கோலம் மற்றும் கவிதைகளை உங்களின் புகைப்படத்தோடு சேர்த்து வாட்சப் அல்லது மெய்ல் மூலம் எங்களுக்கு அனுப்பி வையுங்கள். இதற்கு கட்டணம் ஏதும் கிடையாது.


| | |
|---|---|
| Publisher | : R. Rajesh |
| Editor | : Saranya Rajesh |
| Designer | : S. Aswini |
| Journalist | : P. Praveen |
| Marketing Executive | : C. Karthikeyan |

இது எங்களுடைய ஒரே பத்திரிக்கை நிறுவனம்
This is our only concern

Express Velachery
Weekly - News Paper


37F, Diya Complex
Velachery Main Road, Vijayanagar,
Velachery, Chennai - 600042.
Timing: Monday to Friday 9.30 am to 6.00 pm
Saturday 9.30 am to 12.30 pm
044-42077328 / 7305837388
E-mail : expressvelachery@gmail.com



**DISCLAIMER**

Readers are advised to make appropriate enquiries while responding to advertisements in these columns. Express Velachery does not vouch for any claims made by the Advertisers. The Printers, Publishers, Editor and Owners of Express Velachery shall not be held responsible/ liable for any consequences, in case such claims are found to be false.


## விடுகதை விளையாட்டு

1. காலில்லா பந்தலைக் காணக் காண சந்தோசம் - அது என்ன?
2. மணல் வெளியில் ஓடுது தண்ணீர் கேட்காத கப்பல் - அது என்ன?
3. சிவப்பான பெட்டிக்குள் கருகு மணி முத்துக்கள் - அது என்ன?
4. நடக்கத் தெரியாதவன் நட்டுவனுக்கு வழி காட்டுகிறான் - அவன் யார்?
5. அவன் வெட்டுப்பட்டால் வெட்டியவனை அழ வைப்பான் - அவன் யார்?

### சென்ற வார விடுகதை விளையாட்டிற்கான விடைகள்

**1. வானம் 2. மீன் 3. இதயம் 4. பூமி 5. அரைக்கீரை**

## சொல் விளையாட்டு

______________ ______________
______________ ______________
______________ ______________
______________ ______________
______________ ______________

| | | |
|---|---|---|
| க | னி | அ |
| வ | ப | லை |
| ல் | டி | த |

கட்டத்தில் உள்ள எழுத்துக்களில் 10 வார்த்தைகளை கண்டுபிடியுங்கள்.

### சென்ற வார சொல் விளையாட்டிற்கான விடைகள்

**1. மகாபாரதம் 2. மகா 3. யுகம் 4. பாரதம் 5. பாதம் 6. காகம் 7. ரதம் 8. மரகதம் 9. காதம் 10. மதம்**

**அறுசுவை சமையல்**

## பாதாம் பால் பூரி

தேவையான பொருட்கள்:

பால் - 1 லிட்டர்
கோதுமை மாவு - 2 கப்
சர்க்கரை - 2 கப்
நெய் - 1 டேபிள் ஸ்பூன்
பாதாம் - 10
மஞ்சள் நிற கேசரி பவுடர் - 1 சிட்டிகை
பாதாம் எசன்ஸ் - 4 துளிகள்
குங்குமப்பூ - 2 சிட்டிகை

செய்முறை:

❖ ஒரு பாத்திரத்தில் கோதுமை மாவை சேர்த்து, அதில் நெய், 1 டீஸ்பூன் சர்க்கரை மற்றும் தண்ணீர் சேர்த்து நன்கு மென்மையாக பிசைந்து, 15 நிமிடம் ஊற வைக்கவும்.

❖ பின்னர் அதனை சிறு உருண்டைகளாக உருட்டி, பூரிகளாக தேய்க்கவும். பின்பு வாணலில் பொரிப்பதற்கு தேவையான அளவு எண்ணெய் ஊற்றி காய்ந்ததும், தேய்த்து வைத்துள்ள பூரிகளை போட்டு பொரித்து எடுக்கவும்.

❖ பின் பாதாமை சுடுநீரில் 1 மணிநேரம் ஊற வைத்து, அதில் உள்ள தோலை நீக்கிவிட்டு, பின் அதனை மிக்ஸியில் போட்டு பால் சிறிது சேர்த்து பேஸ்ட் போல் அரைத்துக் கொள்ளவும்.

❖ பிறகு ஒரு பாத்திரத்தில் பாலை ஊற்றி, அதில் அந்த பேஸ்ட்டை சேர்த்து நன்கு கொதிக்க விட்டு, அத்துடன் கேசரி பவுடர் மற்றும் எசன்ஸ் சேர்த்து கொதிக்க விட்டு இறக்கிக் கொள்ள வேண்டும்.

❖ இறுதியில் பாலானது வெதுவெதுப்பாக இருக்கும் போது, அதில் குங்குமப்பூ சேர்த்து கலந்து, பின் பூரிகளை அதனுள் சேர்த்து ஊற வைத்து பரிமாறினால், சுவையான பாதாம் பால் பூரி ரெடி.

## எக்ஸ்பிரஸ் ஜோக்ஸ்..........

டாக்டர் : உங்க கணவர் உங்ககிட்ட பயங்கரமா நடிப்பார் போலிருக்கே?
மனைவி : ஆமாம்... எப்டி சொல்றீங்க?
டாக்டர் : ஓபன் ஹார்ட் சர்ஜரி பண்ணும் போது இதயத்துல இருக்குற என் மனைவிக்கு காயம்படாம பண்ணுங்கன்னு சொன்னாரே!

******

மனைவி : நல்ல செருப்புங்க, 300 ரூவா இருக்கும்... உள்ள போறப்ப இருந்துச்சி... வெளிய வந்தா காணோம்...
கணவன் : அய்யோ அப்புறம் என்னாச்சு?
மனைவி : சரின்னு என் செருப்பையே போட்டுட்டு வந்துட்டேன்...
கணவன் : ???

******

### இணைச் சொற்களை கண்டுபிடியுங்கள்

**கவி**

________ ________ ________ ________

பாட்டு நடனம் கட்டுரை
கவிஞன் கவிதை செய்யுள்

### அறிவியல் தகவல்

## கோவிட் தொற்றைத் தடுக்க மூக்கு 'ஸ்பிரே'

ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த மெல்பர்ன் பல்கலைக்கழக விஞ்ஞானிகள், ஒரு பழைய மருந்தை கோவிட் தடுப்புக்கு பயன்படுத்தலாம் என கூறுகின்றனர். இதற்கான சோதனை ஆஸ்திரேலி-யாவில் நடக்கிறது.

கோவிட் தொற்று மூக்கில் துவங்குகிறது. மூக்கிலுள்ள ஹெபரான் சல்பேட் என்ற மூலக்கூறுகளுடன் கொரோனா வைரஸ் எளிதில் கலந்து, மனித செல்களை தொற்றத் துவங்குகிறது.

இதை தடுக்க ரத்தம் உறையாமல் காக்க உதவும் ஹெபாரின் என்ற மருந்து உதவும் என விஞ்ஞானிகள் கருதுகின்றனர். இந்த மருந்தும், ஹெபரான் சல்பேட் போலவே தோற்றம் கொண்டது.

எனவே, கொரோனா வைரஸ் அதனுடன் கலந்தால் அது செயலிழந்து விடும் என துவக்க கட்ட ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இது உறுதி செய்யப்பட்டால், மூக்கு வழியே ஸ்பிரே செய்யும் எளிய கொரோனா தடுப்பு அரண் நமக்குக் கிடைக்கும்.

TNBIL04133 R.Dis.No.1845/2014



























Owned & Published R.Rajesh, No.17, 100ft, By Pass Road, Velachery, Ch-42. Printed by S.Ali Mohammed Sayeed, Mo.22/49, Subedar Hussain Street, Border Thottam, Royapettah, Ch-14. Editor: SARANYA RAJESH